# திருவிசைப்பாவில் இறைவன் திருநாமச்சிறப்பு: ஓர் ஆய்வு
# DIVINE NAMES OF LORD CIVAN IN TIRUVICAIPPA

முனைவர் இரா. சீதா லட்சுமி / DR. R. Seeta Lechumi

***Abstract***

Of the Twelve Saiva Tirumurais, the Tiruvicaippa is classified as the Ninth Tirumurai. This Tirumurai consists of 28 patikams with a total of 288 verses, which has been authored by nine devotees, from Tirumalikai Tevar to Cetirayar. Following the Saiva tradition of worshipping Civan, the paramount one without a name or form using various names and forms, the authors have pointed out copiously the aspect of His forms and appearance. Thus, it is possible to identify in this text, where the divine names of Lord Civan are mentioned. These names may be classified as special(cirappu) names, common(p-othu) names and names of address(vili). It may be noted that these names depict the characteristics of the Lord in His natural(corupa) state and His general(tadatta) state. Hence, this research paper studies the divine names of the Lord in two sections such as the Names of the Natural(Corupa) State and those of the General(Tadatta) State.

**Key Words:** Tiruvicaippa, Iraivan (Civan), Divine Names, Natural State, General State.

## முன்னுரை

சைவத்திருமுறைகள் பன்னிரண் டனுள் ஒன்பதாம் திருமுறை என்று முறைசெய்து போற்றப்பெறுவது திருவிசைப்பா ஆகும். 28 பதிகங்களும், மொத்தம் 288 பாக்களும் உள்ளடங்கிய இந்நூலின் அருளாசிரியர்கள் திருமாளிகைத் தேவர் முதல் சேதிராயர் வரையுள்ள ஒன்பது தொகையடியார்களாவர் (அருணா சலம், 1974, ஜீஜீ.1112). ஒரு நாமம் ஒருருவமற்ற பரம்பொருளான இறைவனுக்குப் பலபல திருநா மங்களைக் கூறி, பல்வேறு மூர்த்திபேதங்களைக் போற்றுவது சைவநன்மரபு ஆகும் (குமரன், 2015, pp.4041)

அந்நெறியினைப் போற்றும் வகையில், திருவிசைப்பா அருளாளர்கள் ஒன்பதின்மரும் இறைவன் திருநாமச்சிறப்புக் குறித்துப் பலவாறாக விளித்துள் ளதை அடையாளங்கான முடிகின்றது. அத்திருநாமங்கள், 'சிறப்புப்பெயர்', 'பொதுப்பெயர்', 'விளிப்பெயர்' எனும் அடிப்படைகளில் அமைந்து ள்ளதை அறியலாம். அவை, பதிப்பொருளான இறைவனது சொரூப, தடத்த நிலைகளில் வெளிப்படும் இயல்புகளைப் பிரதிபலிப்பனவாகத் திகழ்வன என்பது குறிப்பிடத்தக்கது. அதன் அடிப்படையில், திருவிசைப்பாவில் பெறப்படும் இறைவன்

The author is a Senior Lecturer in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rseeta@um.edu.my

திருநாமங்களை, 'சொரூபநிலைத் திருநாமங்கள்', 'தடத்தநிலைத் திருநாமங்கள்' என்று ஆய்ந்தறிந்து விவரிப்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

## முன்னைய ஆய்வு

திருவிசைப்பா குறித்த முன்னைய ஆய்வுகளைக் கண்ணோட்டமிடும் வேளை, வ. சு. செங்கல்வராய பிள்ளை எழுதியிருக்கும், திருவி சைப்பா ஒளிநெறி எனும் நூல் (1972) திருவிசைப்பாவிலுள்ள ஒட்டுமொத்த செய்திகளின் தொகுப் புப்பட்டியலை உள்ளடக் கிய ஆராய்ச்சிநூலாகத் திகழ்கிறது. இதில் 'சிவபிரான் தன்மை', 'சிவபிரான் திருநாமங்கள்' ஆகிய தலைப்புகளின்கீழ் இடம்பெற்று ள்ள செய்திகள் இறைவனின் சொரூப, தடத்தநிலைத்திருநா மங்களை வகைப்படுத்திப் பட்டி யலிடப் பேருதவியாக அமைந் துள்ளன.

தொடர்ந்து, வேல். கார்த்தி கேயன் பதிப்பித்திருக்கும், "ஒன்ப தாம் திருமுறை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆய்வு மணிகள்" எனும் ஆய்வுக் கருத்தரங்கு நூலில் (2005), ஒன்பதாம் திருமுறை யிலுள்ள பலதரப்பட்ட இலக்கிய, இலக்கண, சமயச் செய்திகளை உள்ளடக்கிய 71 தலைப்புகளிலான ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெற்று ள்ளன. மேலும், கோ. ப. நல்லசிவம் பதிப்பித்திருக்கும், "ஒன்பதாம் திருமுறை, திருமந்திர ஆய்வு மாலை" எனும் ஆய்வு மாநாட்டு நூல் இருதொகுதிகளாக வெளியீடு கண்டுள்ளது (2007). திருவிசைப்பாவின் அமைப்பு, சிறப்பு, ஆசிரியர் வரலாறு, தலங்கள், சமய சித்தாந்த செய்திகள் உள்ளிட்ட தகவல்களை இத்தொகுப்பு நூலிலுள்ள ஆய்வுக் கட்டுரைகள் சுருக்கமாக விவரிக் கின்றன. இக்கட்டுரைகள் அனைத் தும் திருவிசைப்பாவின் பன்முக ச்சிந்தனை வெளிப்பாடாகத் திகழ்கின்றன தவிர, ஆய்வாளரின் ஆய்வுத்தலைப்புக்கு நேரடித் தொடர்புடையதாக விளங்கவில் லை. ஆக, திருவிசைப்பாவில் இறைவனின் திருநாமச்சிறப்புக் குறித்த முழுநிலை ஆய்வு இதுவரை மேற்கொள்ளப்பட வில்லை என்பது தெளிவாகும். அவ்வகையில், திருவிசைப்பாவில் உணர்த்தப்பெறும் இறைவனின் சொரூப, தடத்தநிலைத் திரு நாமச்சிறப்பு இவ்விடம் முழுநி லையில் ஆய்ந்தறியப்படு கின்றது.

## ஆய்வுநெறி

இந்த ஆய்வுக்கட்டுரை திருவி சைப்பா உணர்த்தும் இறைவனின் சொரூப, தடத்தநிலைகளிலான திருநாமச்சிறப்பினைப் பகுத்தாய் தலை மையமாகக் கொண்டு விளங்குவதால், இவ்விடம் பண்பு சார் ஆய்வு அணுகுமுறை கையாளப்பெறுகின்றது. மேலும், இஃது ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பாவை ஆதாரமாகக் கொண்டுள்ளதனால், இவ்ஆய்வு முழுக்க முழுக்க இலக்கியம் சார்ந்த விளக்கமுறை அடிப்படையிலான நூலக ஆய்வாக அமைந்துள்ளது. இந்த ஆய்வுநெறிகளின் வழி பெறப்படும் தரவுகள் ஆய்வுக்குட் படுத்தப்பட்டு, பகுப்பாய்வு செய்யப் படுகின்றன; ஆய்வு முடிவுகள் பின்வருமாறு விவரிக்கப்பெறு கின்றன.

## திருவிசைப்பாவில் இறைவன் திருநாமச்சிறப்பு

பொருள்களின் இயல்பைச் சைவ சித்தாந்தம் 'பொதுவியல்பு', 'உண்மை இயல்பு' என இருவகைப்பட்ட நிலையில் பகுத்துணர்கின்றது. ஒரு பொருளுக்குப் பிற பொருளின் சார்பினால் உண்டாகும் இயல்பு 'பொது இயல்பு' ; பிற பொருளின் சார்பின்றித் தன்னிடத்தில் இயல்பாக உள்ள தன்மை 'உண்மை இயல்பு' ஆகும். பொதுவியல்பு 'தடத்த இலக்கணம்' என்றும், உண்மை இயல்பு 'சொரூப இலக்கணம்' என்றும் வடமொழியில் சொல்லப்படும். உண்மை இயல்பினை, 'சிறப்பியல்பு', 'தன்னியல்பு' என்றும் சுட்டலாம்(கங்காதரன்,1980, ஜீஜீ.70 71).

பதியாகிய பரம்பொருளுக்கும் உண்மை (சிறப்பு) இயல்பாகிய சொரூப இலக்கணம், பொது இயல்பாகிய தடத்த இலக்கணம் எனும் இருவகை இயல்புகள் கூறப்படுகின்றன. பதியின் உண்மை இயல்பாக சைவ ஆகமங;யீள் கூறும் 'தன்வயத்தன்' முதலிய எட்டு குணங்களை எடுத்தியம்பியுள்ளது

உணரத்தக்கது. பிறிதொரு பொருளின் சார்பினால் மாறுபடாத தன்மையுடைய பதியிடம் உலகத்தை நோக்கி நிற்கும் நிலையில் காணப்படும் இயல்புகளே பதியின் பொதுவியல்பாகிய தடத்த இலக்கணாமாகும். இது குணங்குறிக ளோடு கூடிய நிலை (நாகப்பன், 2008, ஜீ.137).

திருவிசைப்பா அருளாளர்கள் தமது திருப்பாடல்களில் இறைவனின் சொரூப, தடத்த நிலைகளில் வெளிப்படும் இலக்கணங்களின் பிரதி பலிப்பாக பரம்பொருளைப் பல வாறான திருநாமங்களால் போற்றிப் பரவியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## i) சொரூபநிலைத் திருநாமங்கள்

சொரூபநிலையில், எண்குணங்கள் பொருந்தியவனாகச் சித்திரிக்கப் படும் இறைவனது திருநாமங்களும் அந்த அருட்கு ணங்களின் பிரதிபலிப் பாகவே அமைந்துள் ளதை உணரலாம். அவ்வகையில், தன்வயத்தன்மை கொண்ட இறைவன், எல்லா உயிர்களுக்கும் தனிப்பெருந்தலைவனாக விளங்கி காத்தருளும் திறத்தைச் சுட்டும் வண்ணம் திருவிசைப்பா ஆசிரியர்கள் கீழ்க்காணும் பதங்களின் வழி இறைவனைப் போற்றித் துதிப்பது தெரிகிறது.

### அட்டவணை 1: திருவிசைப்பாவில் இறைவனின் சொரூபநிலைத் திருநாமங்கள்

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | ஈசன் | 16, 41, 415, 208, 259 |
| 2 | அத்தன் | 257 |
| 3 | தேவன் | 241, 245 |
| 4 | எம்பிரான் | 254, 257, 258 |
| 5 | ஏகநாயகன் | 51 |
| 6 | கடவுள் | 1311 |
| 7 | கோவே! | 38, 202 |
| 8 | பசுபதீ! | 111 |
| 9 | முதல்வனே | 159 |

இவ்வாறு தனிப்பெருந்தலைவனாக விளங்கும் பரம்பொருள், திருவரு ளையே வடிவமாக உடைய தூய உடம்பினன் என்பதனைக் குறிப்பதாக, 'புனிதன்' (5 6), 'புனிதர்' - 'புண்ணியர்' (1610) முதலான பெயர்களைக் கையாண்ட திருவிசைப்பா ஆசிரியர்கள், இப்புண்ணிய வடிவில் இறைவன் இயற்கையறிவோடு திகழும் தன்மையை உணர்த்திட, 'குருமணி' (53), 'குருநீ' (310) என்று இறைவனை அழைக்கின்றனர்.

இத்தகு இயற்கையுணர்வால் இறைவன் அனைத்தையும் ஏககா லத்தில் தானாகவே உணரும் முற்றறிவு கொண்டு விளங்கும் சிறப்பினைப் புலப்படுத்தும் வண்ணம், 'உணர்வுசூழ் கடந்தோர் உணர்வே' (11), 'ஞானகொழுந்து' (204) என்ற சொற்களால் இறைவனைச் சுட்டும் அருளா சிரியர்கள், இம்முற்றறி வினால் பதிப்பொருள் இயல்பாகவே மலமற்றவன் என்பதனை உணர்த்திட, 'பளிங்கின் திரள் மணிக்குன்றே!' (11), 'அனகனே!' (17), 'நிமலத்திரள்' (25 6) முதலான பதங்களால் இறைவனைச் சுட்டியழைப்பது குறிப்பிடத்தக்கது.

இப்படியாகப் பாசங்கள் பொருந்தாத அருட்குணத்தால் இறைவன் குறைவுபடாத அருளாள னாக எல்லா உயிர்களிடத்தும் எப்பொழுதும் குறையாத, கை மாறற்ற பெருங்கருணை புரியும் மாண்பை வெளிப்படுத்தும் வண்ணம் திருவிசைப்பா பாடியோர் பின்வறுமாறு இறைவனைப் போற்றியழைக்கின்றனர்.

### அட்டவணை 2: திருவிசைப்பாவில் இறைவனின் பெருங்கருணைக் குறிப்புகள்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | நேசன் | 258 |
| 2 | வள்ளல் | 104 |
| 3 | கருணைமா கடல் | 52 |
| 4 | கருணா நிலையமே | 111 |
| 5 | கருணாலயா | 67 |
| 6 | சீருயிரே | 267 |
| 7 | சேமத்துணையே! | 38 |
| 8 | என் சித்தமே!! | 69 |

மேற்சுட்டிய பேரருள் காரணமாக இறைவன் முடிவிலா ஆற்றல் கொண்டு உயிர்களுக்கு அருள் பாலிக்கும் சிறப்புப் புலப்படும் பாங்கில் கீழ்க்காணும் பதங்களால் திருவிசைப்பா ஆசிரியர்கள் இறை வனைப் பெயரிட்டு அழைப்பது உணரத்தக்கது.

## அட்டவணை 3: திருவிசைப்பாவில் இறைவனின் பேராற்றல் குறிப்புகள்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | செழுஞ்சுடர் | 54 |
| 2 | பரஞ்சுடர் | 251 |
| 3 | தாந்தோன்றி நம்பி | 57 |
| 4 | தாணுவே! | 157 |
| 5 | காலமே! | 15 |
| 6 | அணுவே! | 157,159 |
| 7 | பூரணா! | 117 |
| 8 | கனக நற்றூணே! | 17 |
| 9 | நிரந்தரனே! | 63 |
| 10 | பேரொளியே! | 116,117 |
| 11 | பாடிலாமணியே! | 134 |
| 12 | என்றன் களைகணே! | 156 |

இவ்வாறு பேராற்றல்மிக்க இறைமைப்பண்பினால் பரிபூரண னாகத் திகழும் இறைவன் இன்ப வடிவினன்; ஆனந்தமே அவன் எனும்படியால், இறைவனின் வரம்பிலா இன்பமுடைமைப் பண்பை உணர்த்தும் பொருட்டுத் திருவிசைப்பா பாடியருளியோர் இறைவனைப் பின்வருமாறு பெயரிட்டு விளித்துள்ளதைக் கற்று ணர முடிகின்றது.

## அட்டவணை 4: திருவிசைப்பாவில் இறைவனின் வரம்பிலா இன்பமுடைமை குறிப்புகள்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | அமிர்தர்" - தீங்கரும்பர் | 1610 |
| 2 | முத்தர் | 278, 279 |
| 3 | போகநாயகர் | 51 |
| 4 | அருமருந்து | 57 |
| 5 | இன்னமுது | 251 |
| 6 | கற்பகக்கனி | 511,512 |
| 7 | அமுதே! | 28, 69, 111, 131 |
| 8 | சம்புவே | 157 |
| 9 | கரும்பே! | 17 |
| 10 | ஆனந்த கனியே | 11 |
| 11 | தேனே | 131 |

மேற்படி அருட்குணங்களின் முழுவார்ப்பாக விளங்கும் இறைவன், குணங்களைக் கடந்த நிலையில் பரிபூரணனாய், சீர்மிகு செம்பொருளாய், முழுமுதற் தன்மையுடன் தோன்றும் நித்தியப் பொருளாயிருக்கும் திறத்தைச் சுட்டும் பாங்கில் கீழ்வரும் பதங்களை இறைவனுக்குரிய திருநாமங்களாகத் திருவிசைப்பா ஆசிரியர்கள் எடுத்தியம்பியுள்ளது உணரத்தக்கச் செய்தியாகும்.

## அட்டவணை 5: திருவிசைப்பாவில் இறைவனின் குணங்கள்

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | குணக்கடல் | 65 |
| 2 | செல்வன் | 261 |
| 3 | பரமன் | 1410, 248 - 249 |
| 4 | சிவன் | 17, 52 - 1311 |
| 5 | தனிமுழுமுதலுமாய் | 182 |
| 6 | விகிர்தன் | 242 |
| 7 | விழுமியோன் | 178 |
| 8 | குணக்குன்றே | 3 |
| 9 | குணங்குறி இறந்தோர் குணமே | 15 |
| 10 | தற்பரம் பொருளே! | 13 |
| 11 | பரம் பரமா! | 227 |
| 12 | சங்கரா | 17, 157 - 268 |
| 13 | அமரனே! | 158, 159 |
| 14 | அறவனே! | 288 |

## (வீ) தடத்தநிலைத் திருநாமங்கள்

தடத்தநிலையில், இறைவன் மூவகை வடிவங்கொள்கிறான்; உருவத் திருமேனியில் பல அணிகளும் ஆடை அணிகலனும், படை ஆயுதங்களும், வாகனமும் கொண்டு, பல வண்ணக்கோலம் பூண்டு, அழகுத் திருகாட்சியளி க்கிறான்; அடியார் பொருட்டுப் பல இடங்களில் எழுந்தருளுகிறான்; திருநடனம் புரிந்து ஐந்தொழி லாற்றுகிறான்; அருளிச்செயல்களும் அட்டவீரட்டச் செயல்களும் புரிகின்றான்; உறவுமுறைகளும் உண்டு. இவ்வாறு உலகை நோக்கிய நிலையில், இறைவன் எழுந்தருளிய திறத்தையும், மேற்கொள்ளும் செயற்பாட்டையும் பிரதிபலிப் பனவாகவே இறை வனது தடத்த நிலைத் திருநாமங்களும் அமைந் துள்ளன என்பது குறிப்பிடத்தக்கச் செய்தியாகும்.

அவ்வகையில் இறைவனது வடிவநிலைகளில் மனம் செலுத்திய திருவிசைப்பா ஆசிரியர்கள், இறை வனது அருவ, அருவுருவ நிலைகளைக் குறிக்கும் வண்ணம் பின்வருமாறு பஞ்சபூதங்களையும், இருசுடரையும் இறைவனது திரு நாமங்களாகச் சுட்டியழைப்பது உணரத்தக்கது.

## அட்டவணை 6: திருவிசைப்பாவில் இறைவனின் அருவ, அருவுருவ நிலைகள்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | அம்பரா - அணிலமே! | 119 - 156 |
| 2 | அம்புவே! | 119 |
| 3 | அனலா! | 119, 156 |
| 4 | புனலே! | 156 |
| 5 | தனிமுழுமுதலுமாய் | 119, 156 |
| 6 | ஞாலமே! | 15 |
| 7 | இந்துவே! - இரவி! | 119 |

இதனையடுத்த நிலையில், திருமேனி கொள்ளும் பரமனின் எழில்கோலத்தைச் சித்திரிக்கும் திருவிசைப்பா அருளாளர்கள், சிவ னின் திருவடியழகு புலப்படும் வண்ணம், 'அறைகழலரசன்'(111), 'பொற்கழலர்'(1610) என்ற பதங் களால் இறைவனைப் பெயரிட்டழைக்கும் பாங்கில், இறைவனது திருவடிகளில் அணியப்பெற்றுள்ள கழல்களையே அப்பிரானது பெயராகச் சுட்டி யிருக்கும் போக்கு உணரத்தக்கது.

இன்னும் இதே பாணியில், சிவனார் திருக்கரங்களில் ஏந்தி யுள்ள அணிகளையும், படை ஆயுதங்களையும் பிரதிபலிக்கும் வண்ணம், கீழ்க்காணும் பதங்களால் சிவனைப் பெயரிட்டழைக்கும் போக்கைக் காணவியலுகிறது.

## அட்டவணை 7: திருவிசைப்பாவில் இறைவனின் அணிகளும் ஆயுதங்களும்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | மானமர் தடங்கைவள்ளல் | 74 |
| 2 | கனல் மழுவான் | 221 |
| 3 | சூலபாணியே! | 17 |
| 4 | சேவேந்து வெல்கொடியானே! | 38 |

இவ்விடம் சிவனின் திருக்கரங் களிலுள்ள மான், மழு, சூலம், இடபக்கொடி முதலியன அடிப் படையில் திருநாமங்கள் ஆகிவந் துள்ளன குறிப்பிடத் தக்கன.

மேலும், சிவனார் திருமேனி யின் தோற்றப்பொலிவில் ஈடுபட்ட திருவிசைப்பா அருளா ளர்கள், சிவனார் திருமேனியில் அணியப்பெற்ற கொன்றைமாலை, வெள்ளைப் பூணூல் ஆகியன அடிப்படைகளில், 'கொன்றை மாலையான்' (209), 'வெண்புரிநூற் கட்டியர்' (1610) என இறைவனைச் சுட்டுவதோடு, பரமன் கோவணமும் பாம்பும் தரித்து நிற்பதை உணர்த்திட, 'கோவணன்' (12 4), 'பண்ணகாபரணன்' (111, 113, 114 - 1110) முதலான திருநாமங்களால் அழைப்பதைக் காணலாம்.

இவ்வாறு பொலிவு காட்டும் சிவனார் திருமேனியின் பலவண் ணத் தோற்றத்தை வெளிப்படுத்தும் அமைப்பில் சிவனாருக்குத் திருநா மங்கள் சுட்டப்பெற்றிருப்பதும் குறிப்பிடத் தக்கது. அவ்வகையில், செந்நிற திருமேனியுடன் காட்சி கொடுக்கும் சிவனை, என்றபடி

## அட்டவணை 8: திருவிசைப்பாவில் இறைவனின் பல்வேறு திருத்தோற்றங்கள்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | தீவணன் | 1410 |
| 2 | பவள மால்வரை | 231 |
| 3 | செம்பளிங்கே! | 123 |
| 4 | செம்பொன்னே, பவளக்குன்றமே! | 157 |

பெயரிட்டழைக்கும் நிலையில், தீயும், பவளமும், பொன்னும் சிவனுக்குரிய செந்நிறத்திற்கு உவமையாக அமைந்துள்ளதை அறியலாம்.

மேலும், பூணூலும் திருவெண் ணீறும் பூத்த வெண்மை நிறத்தோடு விளங்கும் திருமேனியனை,

## அட்டவணை 9: திருவிசைப்பாவில் இறைவனின் திருமேனி.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | வெண்பளிங்கு | 51 - 54 |
| 2 | பால் வண்ணன் | 156 |
| 3 | வெள்ளிக்குன்றமே! | 239 |
| 4 | நீறணி பவளக்குன்றமே! | 15 |

என்ற திருநாமங்களால் சுட்டும் அருளாளர்கள், சிவனின் வெண்மை பூத்த திருமேனியில் கருமை படர்ந்த திருகண்டத்தை நினைவுபடுத்தும் வண்ணம், *'கருமையின் வெளியே!' (14)* எனச் சிவனைப் போற்றியழைப்பது கற்றுணரத்தக் கச் செய்தியாகும்.

மேற்படி திருக்கோலம் பூண்ட சிவபெருமான், திவ்விய அழகும் மங்கலமும் பொருந்திய திருமுகப்பொலிவுடன் விளங்கு வதைப் புலப்படுத்தும் பாங்கில், பின்வரும் திருநாமங்களால் திருவிசைப்பாப் பாடியோர் சிவனை அழைத்துத் துதிப்பது குறிப்பிடத்தக்கது.

## அட்டவணை 10: திருவிசைப்பாவில் இறைவனின் அழகுத்திருக்கோலம்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | அழகன் | 243, 246, 254 |
| 2 | குழகன் | 1410, 247, 2410 |
| 3 | கோலமே! | 14 |
| 4 | சொக்கனே! | 19 |
| 5 | சைவனே! | 156 |
| 6 | விடங்கனே! | 110 |

இவ்வாறு பொலிவுகாட்டும் சிவனார் திருமுகத்திலுள்ள அழகிய இருவிழிகளுடன் நெற்றிக்கண்ண ழகும் ஒருசேர தோன்றும் தன்மையினைக் கீழ்வரும் பதங் களால் திருவிசைப்பா ஆசிரியர்கள் சிவனைப் பெயரிட்ட ழைப்பதும் உணரத்தக்கது.

## அட்டவணை 11: திருவிசைப்பாவில் இறைவனின் முக்கண்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | முக்கணா | 131 |
| 2 | முக்கட்பகவன் | 135 |
| 3 | முக்கண் நாயகர் | 181 |
| 4 | அங்கணா | 158 |
| 5 | கண்ணுதலான் | 2711 |
| 6 | கண்கள் மூன்றுடையதோர் கரும்பே | 17 |

இன்னும் இதே அமைப்பில், சிவனார் திருமுடியழகில் ஈடுபட்ட அருளாளர்கள், *'செஞ்சடை அரன்' (76)*, *'பொன்முடியோன்' (5 8)*, *'புரிசடா மகுடர்' (1610)* என்ற நாமங்களால் ஈசனைப் போற்றிய நிலையில், சிவனார் திருமுடியில் ஊமத்தம்பூ சூடியிருப்பதைச் சுட்டிக்காட்டும் வண்ணம், *'மத்தன்' (1011)* என்று ஓரிடத்தில் இறைவனை அழைத்திருப்பதும் கருதத்தக்கச் செய்தியாகும்.

இதோடு மட்டுமின்றி, சிவ னார் விடைவாகனம் கொண்டு விளங்குவதைக் குறித்திட, *'எருது வாகனன்' - 'ஏறு சேவகன்'( 135)*, *'மழவிடைமேல் வருவான்' (511)* முதலான

நாமங்களால் பரமனைப் போற்றும் அருளாளர்கள், அப்பர மனுக்குத் திருமாலே விடைவாக னனாக எழுந்தருளிய புராணச் செய்தி புலப்படும் வண்ணம், 'மால்விடை ஏறி!'(221) என்று இறைவனை ஓரிடத்தில் விளித் திருப்பது சுட்டத்தக்கது.

அடுத்தநிலையில், அடியார் பொருட்டுச் சிவனார் எழுந்தருளி யவிடங்களின் பெயர்களைப் பிரதிபலிக்கும் திருநாமச்சிறப்பும் சிவனுக்கு உண்டு. அவ்வகையில், 'கோயில்' எனப்படும் தில்லைத் தலத்தைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்ட ஈசனை, 'தில்லை நாயனார்' (2810), 'தில்லை செல்வன்' (42), 'தில்லைவாணா!' (41) என்ற பெயர்களால் சுட்டும் அருளாளர்கள், அத்தில்லையிலுள்ள பொன்னம்பலத்தில் எழுந்தருளித் திருவருள் புரியும் சிவபெருமானை, 'தில்லை அம்பலவன்'(222), 'தில்லை சிற்றம்பலவர்' (27), 'தில்லை செம்பொன் அம்பலவன்' (411) எனப் போற்றித் துதிப்பது உணரத்தக்கது.

மேலும் இதே போக்கில், திருவீழிமிழலையில் எழுந்தருளிய சிவனை, 'திருவீழிமிழலையான்' (510), 'வீழிமிழலை வேந்தே!' (511) என்ற பெயர்களால் அழைக்கும் திருவிசைப்பா ஆசிரியர்கள், திரு வாவடுதுறை, சாந்தையூர் ஈசனை, 'சாந்தையர் வேந்தனே!' (65), 'திருஆவடுதுறை அமுதே!' (6 1), 'திருஆவடுதுறை நம்பி!' (65) என்றவாறு விளித்துப் போற்று வதைக் காணலாம்.

இன்னும், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலத்தில் எழுந்தருளியரு ளும் பரமனை, 'மணியம்பலவன்' (103 - 105) என்று ஓரிடத்தில் அழைக்கும் அருளாளர்கள், 'திரை லோக்கிய சுந்தரனே!' (12) எனும் பெயரால் திரைலோக்கிய சுந்தரத்தில் வீற்றருளியிருக்கும் பெருமானை விளிப்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்னும், கங்கை கொண்ட சோளேச்சரத்தில் எழுந்தருளிய பெருமானை, 'கங்கைகொண்ட சோளேச்சரத்தானே!' (13) எனவும், திருவாரூரில் வீதிவிடங்கராய் எழுந்தருளி அருளும் பிரானை, 'ஆரூர் ஆதி(யாய்)' (181 - 182) எனவும் பெயரிட்டழைக்கும் அருளாளர்களின் திறம் போற்று தற்குரியது.

பிறிதொரு நிலையில், மகேந்திர மலையில் உறையும் ஈசனை, 'குறவா!' (31), 'மகேந்திர வெற்பா!' (32), 'மகேந்திரநாதா' (37) என்ற நாமங்களால் அழைக்கும் திருவிசைப்பா ஆசிரியர்கள், குருமூர்த்தியாகக் கல்லால் நிழல்கீழ் வீற்றிருக்கும் இறைவனை, 'கல்லால் நிழலாய்' (241) எனும் தொடராலும், இடுகாட்டில் உலவும் சிவனை, 'மயானர்' (9 8) எனும் பதத்தாலும் சுட்டிக்காட்டியிருப்பது கற்றுணரத்தக்கச் செய்தியாகும்.

இதனையடுத்தநிலையில், ஐந்தொழிலும் திருநடனமும் புரிந்து உயிர்களை உய்விக்கும் பேரருளாளனான சிவபிரானை,

## அட்டவணை 12: திருவிசைப்பாவில் இறைவனின் திருநடனம்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | அம்பலக்கூத்தன் | 12, 13 |
| 2 | அம்பலத்தாடி | 13, 44 |
| 3 | கூத்தனே! | 233, 234, 264 |
| 4 | கூத்தா! | 12, 1, 2 |
| 5 | மாநடம் மகிழ்வோனே! | 238 |

என்றவாறு அழைக்கும் அருளாளர்கள், எறியாடும் ஈசனை, 'ஆரழல் ஆடுவான்' (22 1) எனவும், வீதியில் அசபாநடனம் புரிய உலாவரும் அழகனை, 'வீதி விடங்கர்(ஆய்)' (181 - 182) எனவும் பெயரிட்டழைக்கும் சிறப் பைக் காணலாம். பிறிதொரு கோணத்தில், சிவனார் அருளிச்செயல்கள் அடிப் படையில் எழுந்த திருநாமச்சிறப்பும் குறிப்பிடத்தக்கது. அவ்வகையில், உமையாளுக்குத் தமது உடலில் ஒரு கூறு அருளிய சிவனாரது அறக்கருணையைப் புலப்படுத்தும் வண்ணம், 'அரிவையோர் கூறு கந்தான்' (254), 'மாதொரு கூறன்' (221), 'வனிதைபாகன்' (56 - 1410) என்ற பெயர்களால் அழைக்கும் அருளாசிரியர்கள், உமையாளை மணந்து தமது பக்கத்தில் இருத்திக் கொண்ட சிவனாரின் பேரருளைப் போற்றுமுகமாக பின்வரும் பதங்களால் போற்றித் துதிப்பதைக் கற்றுணர முடிகின்றது.

## அட்டவணை 13: திருவிசைப்பாவில் இறைவனின் உமையுடன் கூடிய குறிப்புகள்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | உமாபதி | 511 |
| 2 | உமை மணவாளன் | 58 |
| 3 | உமையாள் கணவன் | 2610 |
| 4 | மலைமகள் மணவாளநம்பி | 63 |

*இன்னும் இதே பாணியில், கங்கையைத் தம் திருமுடியில் தாங்கியருளிய ஈசனை,'கங்கை நாயகன்' (15), 'கங்கை அழகரே!' (94), 'கங்கை நங்கை காதலனே!' (205) எனும் நாமங்களால் சுட்டியழைக்கும் அருளாளர்கள், தேய்ப்பிறைச் சந்திரனையும் தமது திருமுடியில் சூடி அருள்பாலிக்கும் பரமனின் கருணையை உணர்த் திட, கீழ்வருமாறு பெயரிட்ட ழைக்கும் அழகைக் காணலாம்.*

## அட்டவணை 14: திருவிசைப்பாவில் இறைவனின் திருமுடி வர்ணனை.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | அம்புலி சூடும்அரன் | 204 |
| 2 | இந்து சேகரன் | 63 |
| 3 | சசிகுலா மவுலி | 54 |
| 4 | சசிகண்ட சிகண்டா | 13 |
| 5 | தருணேந்து சேகரன் | 63 |
| 6 | மதிசூடி! | 195 |

கூடவே, தேவர்களைக் காக்கும் பொருட்டு ஆலகால விடத்தை உண்டருளிய சிவனின் மாண்பை எடுத்துணர்த்தும் போக்கில்,

## அட்டவணை 15: திருவிசைப்பாவில் இறைவனின் விடமுண்ட பேரருள் குறிப்பு.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | கறைக்கண்டன் | 227 |
| 2 | ஆலகண்டா! | 249 |
| 3 | நீலகண்டனே! | 136 |
| 4 | சாமகண்டா! | 13 |

என்ற நாமங்களால் சிவனைச் சுட்டும் திருவிசைப்பா ஆசிரியர் கள், இவ்வாறாக அருளிய ஈசனே தேவர்களுக்கெல்லாம் தலைவனு மாவான் என்ற கருத்துப் புலப்பட,

## அட்டவணை 16: திருவிசைப்பாவில் இறைவன் தேவர் தலைவனான குறிப்புகள்.

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | அமரர் புராணன் | 62 |
| 2 | இமையவர்க்கு அரசு | 51 |
| 3 | வானவர் கோன் | 1710, 10 |
| 4 | அமரர்கள் தலைவனே! | 158 |

என்றெல்லாம் சிவனைப் போற்றி யழைப்பது கருதத்தக்கது. மேலும், அருச்சுனனுக்கு அருளும் பொருட்டு வேடரூபம் பூண்டருளிய சிவனாரை

## அட்டவணை 17: திருவிசைப்பாவில் இறைவன் வேடனான திருவிளையாடல்

| எண் | பதம் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | மறவா! | 31, 288 |
| 2 | வேடா! | 32 |
| 3 | புளின நற்காளாய் | 33 |
| 4 | விசயற்கருள் செய்த வேந்தே! | 34 |

என்ற நாமங்களால் விளித் தழைக்கும் அருளாசிரியர்கள், சனகாதி முனிவர் முதலான வருக்குக் கல்லால மரநிழல்கீழ்

குருவாக எழுந்தருளி உபதேசம் புரிந்தருளிய பரமனின் மாண்பு புலப்பட, 'அருந்தவர்க்கு அரசு'(18) என்ற பதத்தால் இறைவனைப் பெயரிட்டழைக்கும் திறன் போற்று தற்குரியது.

மற்றொருநிலையில் தாருகா வனத்தில் பிச்சாண்டி கோலம் பூண்டு, பிரம கபாலத்தைக் கையில் ஏந்தித் திரியும் சிவனின் மறக்கருணை வெளிப்படும் வண்ணம், 'பலிதிரி அடிகள்' (172), 'வெண்டலை ஏந்தும் குழகன்' (1410), என்ற பெயர்களால் அருளாளர்களால் போற்றப்படும் சிவனார், பிரமன் திருமாலுக்கு அரியவராகி அனல்மலையாக வெளிப்பட்ட தன்மையினால், 'ஞ்தாட்டிருக் கமலத்தவரும் மாலவனும் அறிவரும் பெருமை அடலழல் உமிழ்தழற் பிழம்பர்' (16 5) என்று விளிக்கப்படுவதோடு, செருக்குற்ற இராவணனது வலிய டக்கி அருள்புரிந்த பேராற்ற லால், 'இலங்கையர்கோன் மன்னு முடிகள் நெரித்த மணவாளர்' (278) எனவும் போற்றியழைக்கப் படுவது கற்றுணரத்தக்கது.

இதோடன்றி, சிவனார் புரியும் அட்ட வீரட்டச் செயல்கள் அடிப்படையில் ஆராயும் போது, காமனைத் தம் நெற்றிக்கண்ணால் சுட்டெரித்த சிவனை, 'காமநாசா!' (15), 'காம புராந்தகன்' (611) என்ற நாமங்களால் குறிப்பிடும் திருவிசைப்பா ஆசிரியர்கள், மார்க்கண்டேயன் பொருட்டுக் காலனை எட்டி உதைத்த வீரப்பண்பினால், 'காலகாலா!' (15) என்று ஓரிடத்தில் அச்சிவனைச் சுட்டுவதோடு, வில்லேந்தி திரிபுரம் அழித்த சிவனின் வீரத்தன்மை புலப்படும் நோக்கில், 'புரமூன்று எய்த வில்லி' (207), 'பொன்மலை வில்லி' (78), 'மேருவில் வீரா!' (16) என்ற திருநாமங்களால் அவ்வீ சனை அழைக்கும் போக்கை இவ்விடம் காண முடிகின்றது.

இறுதியாக, உறவுமுறைகள் அடிப்படையில் சிவனைக் குறிப்பிடும் வண்ணம், 'சேந்தன் தாதை' (511) என்ற நாமத்தால் முருகனுக்குத் தந்தையாகவும், 'குமர விநாயக சனகா!' (1 7) என்ற பெயரால் முருகனுக்கும் விநாய கனுக்கும் தந்தையாகவும் திகழும் அவ்வீசனைத் திருவிசைப்பா அருளாளர்கள்,'தனதன்நற் றோழா!' (17) என்றபடி, குபேரனுக்கு நண்பனாக விளங்கும் அப்பெரு மானை விளித்துப் போற்றுவதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

## முடிவுரை

மொத்தத்தில், எண்குணத்தவ னாய் குறிக்கப்பெறும் ஈடுஇணையற்ற பரம்பொருள், தன்னிலையில் தன்மைக ளும் அடையாளங்களும் கடந்த செம்பொருளாகும். அஃது, எண்ணி றந்த உயிர்களுக்கெல்லாம் உணர்த்தும் உணர்வாக இருப்பினும், தம் முழுமையை எடுத்தியம் பவியலாததாய், கால இட எல்லைக்கு உட்படாததாய், வியாபகமிக்கதாகவும், அதே வேளை அதிநுட்பமானதாகவும் இருப்பதே அதன் சிறப்பியல்பாகும். இதுவே சைவ சித்தாந்த துணிபு (இராசேந்திரன், 2017, ஜீஜீ.56 57). மறுகோணத்தில், திருவிசைப்பாவில் இறைவனின் சொரூபநிலைத் திருநா மங்களைத் திருவிசைப்பா அருளா ளர்கள் பாடியிருக்கும் பாங்கு பரம்பொருளின் ஒப்பில்லாத பேராற்ற லைப் பறைசாற்றுகின்றது. அதே வேளை, இறைவனின் பருநிலையில் புலப்படும் தடத்த திருமேனியில் சிவபெருமானுக்குச் சுட்டப்படும் ஆயிரம் திருநாமங் களைக் கூறி போற்றும் வகையில் அவ்வரு ளாளர்கள் பாடியிருப்பது அவர்களது பக்தி அனுபவத்தின் உச்சத்தையே புலப்படுத்தி நிற்கின்றது (துரியானந்தம், 2015, pp.7879; சர்மிளா சதாசிவம், 2016, pp.5152). அவ்வகையில், பதிப்பொருளான இறைவன் குணங்குறிகளைக் கடந்த சொரூப நிலையில் அனைத்தையும் ஆட் கொண்ட ருளும் அருட்குண வடிவானவன்; உயிர்கள்பால் கொண்டுள்ள பேரருட்தன்மை யினால், அவற்றை உய்விக்கும் பொருட்டு வடிவம் தாங்குகிறான். இத்தத்துவ வெளிப் பாட்டின் பிரதி பலிப்பே திருவி சைப்பாவில் காணப்பெறும் இறை வனின் சொரூப, தடத்தநிலை திருநாமங் களாகும். தவிர, மனம், மொழி, மெய்யால் இறைவனைப் போற்றித் துதித்த அருளாளர் பெருமக்களது பக்திப்பெருக்கின் விளைவை மிகத் தெளிவாகப் புலப்படுத்தும் போக்கில் திரு விசைப்பாவில் இறைவன் திரு நாமச்சிறப்புக் குறித்த செய்திகள் அமைந்திருப்பது உய்த்துணரத் தக்கதாகும்.

## References

Anantharasan, A. (2007). *Civanana Potam: Valitunai Vilakkam*. Tirunelvi: Arunanthi Sivam Puttaka Nilaiyam.

Arunaivadivelu Mutaliyar, Si. (1975). *Cittanta Vina-vittai*. Tarumapuram: Nyanasambantam Patipakam, Tarumai Aatinam.

Arunasalam, Mu. (1974). *Onpataam Tirumurai Tiruvisaippaa Tiruppallaandu (Paavum Payindra Nilaiyum)*. Chennai: Chennaip Palkalaikkalaga Veliyeedu.

Gangatharan, Sa. (1980). *Caiva Cittanta Atippataik Kolkaikal*. Madurai: Madurai Tamizhaalaji Publishers. First Edition.

Kantasamy, S. N. (1995). *Tirumurai Ilakkiyam*. Chennai: Ulagat Tamilaaraicci Niruvanam.

Kumaran, R. (2015) "Periya Puranathil Velippadhum Bakthineri". *Journal of Tamil Peraivu*. (Vol.1 & pp.40-41). ISSN 2289-8379.

Nagappan, A. (2008). *Cittanta Caivam*. Kuala Lumpur: Siva Enterprise. First Edition.

*Onpataam Tirumurai, Tirumantira Aayvu Maalai*. (2007). Pathippaasiriyar: Dr.G.P. Nallasivam. Varanasi: Onpataam Tirumurai, Tirumantira Aayvu Maanaadu, Kumaarasaamit Tirumadam. Volume 1 & 2. First Edition.

*Onpataam Tirumurai, Tiruvisaippaa Tirupallaandu Aayvu Manikal*. (2005). Pathippaasiriyar: Dr.Vel.Kartikeyan. Mayilam : Kamachi Patippakam. First Edition.

Rajantheran, M., & Silllalee, K. (2017) "The Deities Of Sangam People Through Purananuru", *Journal of Tamil Peraivu*. (Vol.5 & pp.56-57). ISSN2289-8379.

Sengkalvaraaya Pillai,Va.Su. (1972). *Tiruvisaippaa Olineri*. Chennai: Tirunelvelit Tennintiya Saiva Siddhantha Nuurpatippuk Kalagam, Ltd. First Edition.

Sharmila Sathasivam. (2016) "Suntharar's Rude Language and Its Inner Meanings", *Journal of Tamil Peraivu*. (Vol.4 & pp.51-52). ISSN 2289-8379.

Thuriyanantham, K. (2015). "Tirumuraigalil Iyarkai Varunanai". *Journal of Tamil Peraivu*. (Vol 2 & pp.78-79-57). ISSN 2289-8379.

*Tiruvisaippaa Tiruppallaandu (Onpataam Tirumurai) Telivurai*. (1964). Ti.Paddusamy Othuvaar Urai. Sri Vaikundam: Sri Kumarakuruparan Sangam.

*Tiruvisaippaa Tiruppallaandu. Onpataam Tirumurai. Polippurai, Vilakkak Kurippuraikaludan*. (1977). C.Arunaivadivelu Mutaliyaar Vilakkak Kurippurai. Mayilaaduthurai: Nyanasambantam Patippakam, Tarumai Aatinam. Second Edition.

*Tiruvisaippaa Tiruppallaandu. Onpataam Tirumurai. Polippurai, Vilakkak Kurippuraikaludan*. (1997). Pathippaasiriyar: Srimath Tirunyanasambantat Tambiraan Swamigal. Mayilaaduthurai: Tarumai Aatinam. Second Edition.